உ

ஸ்ரீ ராமஜெயம்

ஸ்ரீ விகனஸ மஹா குரவே நம :

அருள்மிகு கரிகிருஷ்ண பெருமாள் திருக்கோயில்

திருவாயர்பாடி, பொன்னேரி - 601 204.

திருவள்ளூர் மாவட்டம்

தலவரலாறு

இருப்பிடம் :

காஞ்சீ - பிரதேசம் - தொண்டீர மண்டலம்

பிருந்தாவன க்ஷேத்திரம் - பாரத் வாஜாச்ரமம்

அரணீ நதி தீரம் - வடதிசை வாயிலாக

அமைந்த ஆலயம்

1. பொன்னேரியின் பெருமை :

முன்பு ஒரு சமயம் அரண்ய நதியில் (ஆரணி ஆறு) சிறார்கள் விளையாட்டின் பொழுது ஆற்று மணலில் ஏர் கலப்பை (பொன்னாலான ஏரு) கிடைத்ததால் பொன்ஏரு என பெயர் பெற்றது. ஆனால் தற்பொழுது வழக்கில் **பொன்ஏரு** மருவி **பொன்னேரி** என ஏற்பட்டது.

2. கோவில் கட்டிய நோக்கம் :

கரிகால சோழன் வடநாட்டின் கண் திக் விஜயம் செய்ய இம்மண்டபத்திற்கு வந்தபோது இங்கு அரணீ நதிக்கரையில் மணற்குன்று ஒன்று இருந்தது. நதியின் கரையில் மகிழ மரங்கள் பூத்து குலுங்கிய வண்ணம் நிழற்தந்து அடர்ந்து காணப் பட்டது, சிறுவர்கள் ஆற்றங் கரையில் விளையாடிக் கொண்டருந்தனர். இம்மணற் மேட்டில் ஏதோ ஓர் சிறப்பு இருந்தமையின் காரணமாக அங்கு அவர்கள் சென்று விளையாடும்போது மயிர் கூச்சிடுவதும் தன்னையும் அறியாமல் ஓர் பக்தி ஏற்படுவதும் இயல்பாக இருந்து வந்தது. ஒருநாள் தன் இருப்பிடத் தை வெளிப்படுத்த வேண்டி பெருமையுடன் ஆயர் குலச்சிறுவர்களின் மாடுகளை மெய்மறக்கச் செய்து விட்டார். அக்குழுவின் ஓர் சிறுவன் இம்மணற் மேட்டின் சிறப்பினை அறிய எண்ணி மணலை நாற்புறமும் ஒதுக்கித் தள்ளினான். உடன் ஒரு சிறு கருங்கல் குழவி போன்ற ஒரு தோற்றம் தென் பட்டது. அதைப் பெயர்த் தெடுக்க எண்ணி முயற்சி த்தபோது மேலும் ஒன்றும் செய்யவேண்டாம் என்றும் ஞான உலகம் உய்விக்க மாடு மேய்க்கும் கண்ணனாக முன்னமே உருவம் கொண்டு காலம்

நோக்கி புற்றில் இருந்ததையும், இனி நான் இந்த நதிக்கரையிலேயே கோயில் கொண்டெ ழுந்தருளி உலகை உய்விக்க நினைத்துள்ளேன் என ஓர் அசரீரிக் கேட்டது. அதைக் கேட்ட சிறுவர்கள் தங்கள் இருப் பிடம் சென்று ஊர்பிரமுகர் களிடம் முறை யிட்டனர். அவர்கள் எம்பெரு மானின் எண்ணப் படி காவடிகளில் பால் குடம் ஏந்தி புற்றைக் கரைத்து முழு உருவத்தையும் வெளிப்படுத்தினர். பின்னர் அவருக்கென ஒரு நிழற் ஏற்படுத்தி இது விஷயத்தை அப்பொ ழுது திக் விஜயம் செய்த கரிகால சோழனி டம் எடுத்துரைத்தனர். அரசன், கிருஷ்ணனின் திரு மேனியின் அழகை கண்டு அவருக்கென ஒரு கோயி லெடுத்தான். அது இன்றளவும் நிலைத்துள்ளதை காண்கிறோம். (இப்போதுள்ள கருவறை அக்காலத் தில் ஏற்பட்டவையாகும்.)

3. கரிகிருஷ்ணன் என பெயர் கொண்டது:

கரிகால சோழன் கோவில் அமைத்ததால் கரி என்னும் அடைச்சொல் சேர்ந்தமையின் கரிகிருஷ்ண என்கிற காரணப்பெயர் வழக்கில் உள்ளது.

4. திருமேனியின் சிறப்பு :

கண்ணன் வடதிசை நோக்கி வலுதுகாலை ஊன்றியும் இடது காலை சிறிது மடித்தும் பூமியில் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார். மற்ற ஆலயங்களில் ஸ்வாமி திருவடி (பாதம்)யின் கீழ் ஸ்வாமியின் உருவத்தை நிலைநிறுத்தி அஷ்ட பந்தனம் என்றும் மருந்து சாத்துவது இன்றியமை யாத ஒன்றாகும். அதுபோல் பீடமோ அல்லது மருந்து சாத்துதலோ இதுவரை இந்த ஆலயத்தில்

இல்லாத ஒரு சிறப்பாகும். வலது கையில் ஆனிறை மேய்க்கும் வண்ணம் சாட்டையும், மாடுகள் மேய்வ தை கவனிக்கும் தோரணையில் நிற்கும் கண்ணன் இடது கையை இடுப்பிலும் வைத்துள் ளான். மார்பில் திருமாலுக்குரிய ஸ்ரீவத்ஸம் என்னும் திருமார்பு லக்ஷ்மி, முப்பிரி நூலும், கடக கோபுர ஹாரங்கள் போன்ற ஆபரணங்களும் திருமேனியை அழகுபடுத்துகின்றன. முகம் திருமுக மண்டலம் மிக்க அழகும் கவர்ச்சியும், காண்போரை ஈர்க்கும் சக்தியும், கருணைக் குறி நிரம்பிய கண் பார்வையும் அமைதியற்ற நிலையை அமைதிப்படுத்தும் முக பாவனையும் எடுத்துரைக்க இயலாத ஓர் சிறப்பும் திருமுடியில் கிரீடம் என்னும் தோற்றம் இல்லாமல் ஓர் பால் கலயம் ஏந்தியவாறு அமைந்துள்ளது. இதை வடமொழியில் உள்ள ஸ்தல புராணம் என்ற செய்யுளின் வாயிலாக எடுத்துக் காட்டுகிறது.

> அமிருத கலசதாரம், கோபவேஷப்ரதானம்
> கிரஸி, விதுருத யஷ்டிம், பாணிநா தட்சினேந
> கடிவிநிஹிதஹஸ்தம், காந்தப்பரந்தாவனேசம்
> அனுஷமனுபவேயம், சுந்தரம் ஸ்ரீபதேசம்.

இதன் பொருள் :

தலையில் அமிருத கலசம் வைத்தும், மாடுமேய்க்கும் இடையன் வேஷத்தை ஏற்றும் வலது கையில் ஏந்திய சாட்டையையுடையவனும், ப்ருந்தாரண்யம் என்னும் க்ஷேத்திரத்தில், நிலைத்து ஒளி தருபவனும் இடது கையில் இடுப்பில் அமர்த்தி ஒளிமிக்க அழகுத் திருமேனியையுடைய திருமகள் மணாளனான கண்ணனை எப்போதும் கண்குளிர கண்டு பேரானந்தம் அடைவோமாக என்பதாகும்.

உற்சவர் ஸ்ரீதேவி, பூதேவியருடன் நான்கு கரங்களுடன் சக்கரம், சங்கு, அபயம், வரதம் போன்றவைகளுடன் அமையப்பெற்றுள்ளார். இந்த ஆலயம் ஸ்ரீ வைகானஸ பகவத் சாஸ்த்ர முறைப்படி பூஜை முறைகளை பின்பற்றி வருகின்றது.

ஸ்ரீ விகனஸர் என்னும் மஹரிஷி பகவானுடைய ஆராதனைகளை ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து பூலோகத்திற்கு எழுந்தருளினார். அவர் ஏற்படுத்திய மதம் வைகானஸம் என்பதாகும். அதை பின்பற்றுபவர்கள் வைகானஸங்கள் வேத மந்திரங்களின் அடிப்படையில் நடைபெறும் சடங்குகள் ஆகமம் என்பதாகும். இன்றும் அதே முறை நடைபெறுகிறது.

வைகானஸ ஆகமத்தின் வழக்கப்படி ஆலயத்தின் மூர்த்தங்கள் ஐவகையாக பிரதிஷ்டை செய்யப்படுகிறது.

1. மூலவர்:

இவர் தேர்ந்தெடுத்த சுத்தமான ஜீவனுள்ள சக்தியுள்ள (மலையின்) கருங்கல்லில் உருவமைக்கப்பட்ட திருமேனியுடைய அசையாத (துருவம்) கருவறையில் நிலைத்து நின்று அருள்புரியும் மூலவராகும். இவருக்கு விஷ்ணுவென பொதுப் பெயர். தவிர ஆலயங்கள்தோறும் காரைப்பெயராகவும் அமையும். (இங்கு கரிகிருஷ்ணன்)

2. உற்சவர் :

அவர் (ஐம்பொன்) பஞ்சலோகம் என சொல்லப் பெரும். இவர் ஸ்ரீ தேவி, பூதேவியுடன் காட்சி தருகிறார். இவருக்கு புருஷன் என்ற பெயராகும். வீதி உலாவின் போது காட்சி தந்து அருள்புரிபவர்.

3. கௌதுசர் :

இவரும் உற்சவரை போன்ற தோற்றமும் ஸ்ரீதேவி, பூதேவியுடன் கோவிலிலேயே எழுந்தருளி யிருப்பார். நடைமுறையில் 2-வது மூர்த்தத்திற்கு ஏதேனும் தகாதாக் கள் ஏற்பட்டல் அதுசமயம் இவர் அதனை பூர்த்தி செய்வார். இவருக்கு ஸத்தியன் எனப் பெயராகும்.

4. ஸ்னபநபேரம் :

இவர் நாள்தோறும் திருமஞ்சனம் என்னும் அபிஷேகம் கண்டருள்வார். இவருக்கு அச்சுதன் எனப் பெயர்.

5. பலிபேரம் :

இம்மூர்த்திக்கு அநிருத்தன் என்றும் செல்வர் என்ற பெயரும் வழங்கப்பெறுகிறது. பூஜைகள் யாவும் முடிந்து உரிய பலிசாதித்தல் என்றும் கட்டத்தில் இவரை பல்லக்கில் எழுந்தருளச் செய்து நாள்தோறும் உற்சவம் செய்விப்பது இவருக்குத் தான். இவர் முன்னிலையில் பலி சாதித்தல் நடைபெறும். இம்முறையை உடையது சிறப்பெனப் போற்றப் படுகிறது.

ஐம்பொன், ஐந்து பேரங்கள் ஐந்து வகைச் செயல்களில் என்பவைகள் எல்லாம் நமது பஞ்ச பூதத்துடன் ஒப்பிடுதலைக் குறிக்கிறது. ஸ்ரீவைகானஸ ஆகமத்தின் முக்கிய சிறப்புகளில் பஞ்சபேர பிரதிஷ்டை என்பது மிக்க சிறப்பான தாகும்.

தாயார் : (ஸ்ரீ சௌந்தர்யவல்லி)

தனியாக சன்னதி உள்ளது இழுக்கு முகமாக நின்ற திருக்கோலத்தில் இரண்டு கைகளுடன்

ருக்மணித்தாயார் என்ற பாவத்தில் கண்ணன் இரண்டு கைகளுடன் இருக்கும்போது தான் மட்டும் அமர்ந்து நான்கு கரங்களுடன் சேவை சாதிப்பது உசிதமன்று என்று எண்ணியது போல மற்ற ஆலயங்களில் இல்லாத ஓர் தனிச்சிறப்பான முறையில் தாயாரின் தோற்றம் அமைந்துள்ளது பெயருக்கு ஏற்ற வண்ணம் (சௌந் தர்யவல்லி) என்ற பெயருடன் அழகின் ஒன்றினையே குடி கொண்ட ஓர் மூர்த்தமாகும்.

உற்சவர் :

நான்கு கரங்களுடன் தாமரையை ஏற்று அபயம், வரதம் என்பவற்றுடன் பத்மாஸனமாக அமர்ந்துள்ளதுடன் மிக்க வரப்பிரசாதியாக இருந்து வருகிறார்.

ராமர் :

தனிசன்னதியில் வடக்கு முகமாக ஸ்ரீராமன் இளைய பெருமாள் (லட்சுமணர்) சீதாபிராட்டி யாருடன் மூலவரும், உற்சவரும் ஒன்றுபோல் காட்சி தருகின்றனர்.

மற்ற கோவில்களில் இல்லாத ஓர் தனிச்சிறப்பு இங்குள்ள ராமனுக்கு உண்டு. பாராத்வாஜாச்ரமம் என்பதை மெய்பிக்கும் வண்ணம் ஸ்ரீராமர் காட்டில் செல்கிறார். சீதை ராமனுக்கு முன் செல்கிறார். பின்னர் ஏதும் தீங்கு ஏற்படாத வண்ணம் இளைய பெருமாள் காவல்புரிகிறார். எல்லா சன்னிதிகளிலும் சீதாபிராட்டியார் பூமிதேவியின் அம்சமாக ராமனு க்கு இடதுபக்கம் இருப்பது வழக்கம். இங்கு வலது பக்கம் இடம் கொண்டிருக்கிறார். மற்ற ஆலயங் களில், ராமனைப் போல் லட்சுமணனும் வில் அம்பு

ஏந்திய வண்ணம் அமையப் பெற்றிருக்கும். மற்ற ஆலயங்களில், இங்கு லட்சுமணன் தொண்டின் அறிகுறியாக, சேவசாவிருத்தி என்பதுபோல கையைக் கூப்பி (அஞ்சலி ஹஸ்தமாக) ராமனுக்கும் தாழ்ந்து பணிவிடையேற்ற வண்ணம் அமைந்துள்ளது. எதிரே தனியாக சிறிய திருவடி என்னும் ஆஞ்சநேயர் சன்னதி உள்ளது.

ஆண்டாள் :

ஆலயத்தின் வடமேற்கு புறத்தில் ஸ்ரீஆண்டாள் சன்னதியுள்ளது.

மேலும் துவாரபாலகர்கள், ஸ்ரீகருடாழ்வார், பன்னிரு ஆழ்வார்கள், ஸ்ரீவிகனஸர், ஸ்ரீராமானுஜர், மணவாள மாமுனிகள், திருகச்ச நம்பிகள், எம்பார் முதலான சன்னதிகளும், நவந்த கண்ணன், சக்கரத் தாழ்வார், வேணுகோபாலன் ஆகிய உற்சவ மூர்த்தங் களின் மிக்க பழமையானதை தோற்றுவிக்கின்றன.

உற்சவங்கள் :

இங்கு திருவோண நட்சத்திரத்தில் ஒன்பதாவது நாள் தீர்த்தவாரியும் அவரோகண முறைகளை கொண்டு சைத்ர பிரம்மோற்சவம் நடைபெறு கின்றது. ஸ்ரீ வைகானஸ ஆகம விதிப்படி 5-வது நாள் இரவு கருடசேவை சிறப்பாகும். பத்து நாட்களுக்கு உரிய வாகனங்கள் உள்ளன.

சந்திப்பின் சிறப்பு :

அகத்திய முனிவரும், பரத்வாஜ முனிவரும் அரி, அரன் இவர்களை குறிப்பிட்ட நாளில் காண கதிரவன் தோன்றும்முன் சுமார் 5 மணிக்குள் ஒருசேர காட்சியுற தபஸ் செய்த வண்ணம் அவர்க

ளின் வேண்டுதலை ஏற்று விஷ்ணு கருடாரூடனாய், சிவன் விருஷபவாகனுடனாய், தனது விநாயகர் (மூஷிக வாகனம்), சுப்ரமண்யர் (மயூரம்), சண்டி கேஸ்வர் (விருஷபாருடர்) அம்பாள் முதலான பரிவாரங்களுடன் அரிஅரன் பஜாரில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ கோதண்டராமன் சன்னதியில் பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ள அகத்திய, பரத்வாஜ முனிவரின் முன்னி லையில் புறப்பட்டு வந்து கற்பூரார்த்தி கொடுத்து காட்சி தந்து ஆலயம் ஏற்பட்ட நாள் முதற்கொண்டு நடைபெறும் ஓர் மத ஒற்றுமையைக் குறிக்கிறது.

இவ்வாலயத்தில் திருக்குளம் பெயர் சந்தான புஷ்கரணி என்பதாகும். ஆலயத்திற்கு முன்புறம் அரண்ய நதியும், பின்புறம் திருக்குளம் அமைந்திருப் பது சிறப்பு அம்சமாகும். மேலும் இவ்வாலயம் ஆறு அதிசயங்கள் கொண்டதாகும்.

1. பெருமாள் ஸ்வயம்பு
2. சிரசில் அம்ருத கலசம்
3. தாயார் நின்ன திருக்கோலம் (பெருமாளுக்கு இடப்புறம்)
4. பதினாரு கால் மண்டபத்தின் தூண்கள் சாய்ந்தவாறு உள்ளது
5. அரியும், அரனும் சந்திக்கும் சந்திப்பு உற்சவம்.
6. ஸ்தல விருக்ஷம் : மகிழ மரம்.

ஸ்ரீ சௌந்தர்யவல்லி சமேத ஸ்ரீ கரிகிருஷ்ண ஸ்வாமிதே நம :
ஸ்ரீ விகனஸ குரவே நம:

ஸ்தல புராணம் :-

பொன்னேரி ஊர் சிறப்பு :

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டம் பொன்னேரி என்னும் ஊர் சென்னை கல்கத்தா செல்லும் ரயில் மார்க்கத்தில் சென்னையிலிருந்து 35 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இங்கு ஆலயம் கட்டுவதற்காக பொன் ஏர் கட்டி உழவு செய்ததாக சொல்லப்படுகிறது. வைகானஸ சாஸ்த்திரப்படி ஆலயம் கட்டுவதற்கான இடத்தை தேர்வு செய்து அந்த இடத்தில் தானிய விதைகளை விதைத்து அவைகள் நன்கு விளைகின்றனவா என்று சோதிப் பார்கள். நன்கு விளைந்த அந்த பயிர் வகைகளை பசு மாடுகளை விட்டு மேய்த்து விடுவார்கள். இதற்கு **கோகனா நிவேதனம்** என்று பெயர். நிலத்தில் பயிர்கள் விளையவில்லை என்றால் அந்த இடத்தை விட்டு வேறு இடத்தில் கோயில் அமைப்பார்கள். அந்த வகையில் ஆலயம் அமைக்க பொன் ஏர் கட்டுவார்கள். ஊர் நடுவில் விஷ்ணு ஆலயம் அமைக் கப்படும். சிவ ஆலயங்கள் ஊர் ஓரத்தில் அமையும். காவல் தெய்வங்களான அம்மன், பிடாரி, காளி போன்ற தெய்வங்கள் ஊருக்கு புறம்பே அமையும்.

பொன்னேரியின் ஓர் பகுதியான திருஆயர் பாடி, என்கிற கிராமத்தில் மத்தியில் ஸ்ரீ கரிகிருஷ்ண பெருமாள் கோயில் அமைந்துள்ளது. இந்த கோயிலின் முக்கிய தெய்வமான ஸ்ரீ கரிகிருஷ்ண பெருமாள் மனிதர்களாலோ, ரிஷிகளாலோ, தேவர்களாலோ பிரதிஷ்டை செய்யப்பட்டவர் அல்ல.

சுயம்புவாக (தான்தோன்றியாக) தோன்றிய

வர். இந்த ஊரைச் சுற்றியும் உள்ள கிராமங்களில் அந்த காலத்தில் நல்ல விளைச்சல் இருந்தது. கோயிலுக்கு வடக்கில் **அரண்ய நதி** என்கின்ற ஆறு உள்ளது. இந்த அரண்ய நதியில் கோடை காலங் களில் கூட சிறிதளவாவது நீர் இருந்தது. கோயிலுக்கு தென்புறம் ஒரு ஏரி இருந்தது. இதிலிருந்து பாசனம் செய்து விவசாயத்தில் நல்ல மகசூல் கிடைத்ததால் இந்த ஏரிக்கு பொன்னேரி என்ற பெயர் வந்தது என்றும் அந்த பெயரே ஊருக்கும் அமைந்து விட்டது என்றும் சிலர் கூறுவர்.

சோழ மன்னர்களின் பெருமை :

சோழ நாடு சோறுடைத்து என்ற பழமொழி உள்ளது. சோழ மன்னர்கள் வீரம் மிக்கவர்களாக வும். தெய்வ பக்தி மிகுந்தவர்களாக வும் விளங்கி னர். அவர்களுடைய தெய்வ பக்திக்குச் சான்றாக இன்றும் நம் நாட்டில் பல கோயில்கள் விளங்கு கின்றன. ஒவ்வொரு மன்னரும் தங்கள் ஆட்சியின் போது ஒரு சில கோயில்களையாவது நிறுவி உள்ளனர்.

ஏற்கெனவே உள்ள கோயில்களிலும் நந்தா விளக்கு அமைக்கவும் நிவேதனதிற்காகவும், விழாக் களை நடத்தவும், பல கட்டளைகளை ஏற்படுத்தி இருந்தார்கள் என்பதும் கோயில்களில் பணிபுரியும். அர்ச்சகர்கள் முறைப்படி வேத மந்திரங்களை கற்று தேர்ந்து சிறப்பான முறையில் கோயில் பூஜைகளை யும் செய்வதற்கு உதவும் வகையில் சுரோத்திரிய மான்யங்களை வழங்கி உள்ளார்கள் என்பதும் சோழர்களால் கல்வெட்டுகளிலிருந்து தெரிகிறது.

கரிகால சோழன் வரவு :-

கரிகால சோழன் என்கிற அரசன் வடநாட்டில் போர் செய்து வெற்றியுடன் திரும்பி வருகின்ற பொழுது தன்னுடைய நால்வகை சேனையுடன் அரண்ய நதியின் தென்கரையில் ஓர் பெரிய

ஆலமரத்தின் அடியில் முகாமிட்டதாக கூறப்படு கிறது. அது சமயம் கரிகால சோழ அரசனது பட்டத்து யானை தற்போது ஸ்ரீ கரிகிருஷ்ணபெருமாள் சேவை சாதிக்கும் இடத்தை நோக்கி மிக பயங்கரமாக பிளிறியதாகவும் யானையின் இந்த பிளிறலை பார்த்து அரசரும் அவரது படையினரும் யானை காட்டிய இடத்திற்கு சென்று பார்த்ததில் அங்கு அடர்ந்த காடுகளுக்கு இடையில் ஓர் கற்றளியிலான கருவறையில் நின்றபடி சேவை சாதித்து அருளும் கிருஷ்ணனை கண்டதாகவும் பிறகு கரிகால சோழ அரசரே தற்போது உள்ள கோயிலை நிறவியதாகவும் செவி வழி வரலாறு கூறுகிறது.

கரிகால சோழனால் கோயில் கட்டப்பட்ட தால் இங்குள்ள கோயிலுக்கு கரிகிருஷ்ண பெருமாள் என்ற பெயர் அமைந்ததாகவும் கூறப்படு கிறது. கரிகால சோழனின் பட்டத்து யானையினால் காட்டப்பட்ட கிருஷ்ணன் என்பதால், **கரிகிருஷ்ணன்** என்று வழங்கப்படுவதாகவும் கூறுவர். கரி என்றால் யானை என்பது அனைவரும் அறிந்ததே.

கோயில் :-

சுயம்பு :-

பெருமாளின் தோற்றம் :

இக்கோயில் உள்ள இடம் துளசி செடிகளும், நெரிஞ்சி முள்ளும் நிறைந்து ஒரு காடாக இருந்த தாம். பக்கத்தில் உள்ள சதுர்வேத மங்கலம் என்ற சிற்றூரில் இருந்து ஆயர்கள், பசுமாடுகளையும், கன்று காலிகளையும் மேய்ப்பதற்கு இந்த இடத்தை பயன்படுத்தி வந்தனர். தற்போது பெருமாள் இருக்கும் இடத்தில் ஓர் பெரிய புற்று இருந்ததாம். அங்கு மேயும் மாடுகளில் ஒரு மாடு மட்டும் தினமும் மாலையில் புற்று மேட்டுமேல் ஏறி நின்று பாலை

தானாகவே புற்றில் பொழியுமாம். ஆயர்கள் மாட்டை வீட்டுக்கு ஓட்டிச் சென்று மாலையில் பால் கறக்க முயன்றால் பசுவின் மடியில் பால இருக்கா தாம். மாடு மேய்க்கும் சிறுவர்களை கேட்ட பொழுது தங்களுக்கு இது பற்றி ஒன்றும் தெரியாது என்று சொல்லிவிட்டார்களாம். மாடு மேய்க்கும் சிறுவர்கள் தான் பாலை கறந்து குடித்து விட்டு பொய் சொல்கி றார்கள் என்று நினைத்த ஆயர்கள் ஒன்று கூடி இதற்கான காரணத்தை கண்டுபிடிக்க முடிவு செய்தனர். மாலை வேளையில் அவர்கள் காட்டின் புதர்களில் மறைந்திருந்து கண்காணித் தனர். அப்பொ ழுது ஒரு மாடு தானாகவே புற்றின் மேல் ஏறி நின்று பாலை புற்றில் பொழிவதை கண்டனர். புற்றில் என்னயிருக்கிறது என்பதைப் பார்க்க தீர்மானித்தனர். கிராமத்தில் பலரையும் அழைத்துக் கொண்டு வந்து புற்றை சுற்றியுள்ள மரங்களை அகற்றி புற்றை வெட்டி பார்க்க முனைந்தனர். அப்பொழுது பெருமாள் அசரீரியாக நான் இந்த புற்றில் இருக்கிறேன். பசும் பால் நிறைய கொண்டு வந்து புற்றை கரைத்தீர்களானால் உங்களுக்கு சேவை சாதித்து கொண்டு இங்கே இருப்பேன். ஆயுதங்களால் புற்றை வெட்டினீர்க ளானால் உங்களுக்கு தீமை ஏற்படும். முற்றிலும் நான் வெளிப்படும் வரையில் பாலினால் புற்றை கரைக்க வேண்டும் என்று அருளினாராம். அதன்படி சின்னகாவடிகளிலும், பெரியகாவடிகளி லும், பசும்பாலை தவலையாக கொண்டு வந்து புற்றை கரைத்தனராம். முற்றிலும் பெருமாள் வெளிப்படுவ தற்கு சற்று முன்பு ஒருவர் ஆவல் மிகுதியினால் கைகளினால் பெருமாள் பாதத்தை மூடிக்கொண் டிருந்து புற்று மண்ணை தோண்டினாராம். அப்பொழுது மீண்டும் பெருமாள் அசரீரியாக "ஏ மூடர்களே! நான் சொன்னபடி பாலினால் கரைக்காமல் உங்கள் முயற்சியினால் என்னை காண

முயன்றதால் இனிமேல் எவ்வளவு பாலை கொட்டி னாலும் புற்று மண் கரையாது தற்பொழுது வெளிப் பட்டுள்ளபடி சிறிது சாய்ந்த நிலையிலே நான் இருப்பேன். கலியுகம் முடியும் பொழுது உங்களை எல்லாம் காப்பதற்காக நானாகவே நேராய் நிற்பேன்" என்று கூறி அருளினாராம்.

புற்றிலிருந்து சுயமாக தோன்றியதால் தான் தோன்றி பெருமாள் (சுயம்பு மூர்த்தி) என்று கொண் டாடப்படுகிறார்.

பொதுவாக பெருமாள்கோயில்கள் நான்கு வகையாக அமைந்திருக்கும்.

சுயம்பு க்ஷேத்திரம் - பெருமாள் தானாகவே தோன்றுதல். நம் கரிகிருஷ்ண பெருமாள், திருமலை ஸ்ரீ வெங்கடேச பெருமாள், புவனகிரி ஸ்ரீ முஷ்ணம் வராஹப் பெருமாள், கரூர் தான்தோன்றிமலை பெருமாள் ஆகிய பல கோயில்களில் பெருமாள் சுயம்புவாக சேவை சாதிக்கிறார். இந்த மூர்த்தி களுக்கு அருள்பாலிக்கும் சக்தி மிக மிக அதிகமாக காணப்படும்.

இரண்டாவது வகை **தேவதா பிரதிஷ்டை** தேவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்திகள் அமைந்திருப்பது. இது மாதிரி கோயில்களில் மூர்த்திகள் மிக உயரமாகவும், கம்பீரமாகவும் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கும். அபிஷேகம் அலங்காரம் செய்வதற்கு ஏணி அல்லது உயரமான பெஞ்சு வைத்துக் கொண்டு தான் செய்ய முடியும். **தேவதைகளுடைய உயரம் 18 அடி இருக்கும் என்பதால் அவர்கள் சுலபமாக அபிஷேக ஆராதனை செய்திருப்பர்.** அத்தகைய கோயில்களில் மனிதர்கள் பூஜை செய்ய முற்படும்போது பலவித அபசாரங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே அத்தகைய கோயில்களில் சான்னித்யம் குறைந்து காணப்படும்.

மூன்றாவதாக **ஆர்ஷ பிரதிஷ்டை**. ரிஷி என்றால் நான்கு வேதங்களையும் கற்று உணர்ந்து தவம் செய்து இறைவனை உணர்ந்து பகவானின் நினைவிலேயே ஒன்றியிருப்பவர் என்று பொருள். அத்தகைய ரிஷிகள் உலக க்ஷேமத்திற்காக பெருமாளை தியானம் செய்து தம் மனதில் தோன்றிய உருவத்தை சிற்பிகளைக் கொண்டு வடிவமைத்து பிரதிஷ்டை செய்து உலகத்தில் உள்ளோர் வழிபட்டு அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நால்வகைப் பேறுகளையும் பெறுவதற்க்காக பிரதிஷ்டை செய்யப் பட்ட கோயில்கள் ஆர்ஷ பிரதிஷ்டை என வழங்கப் பெறும். திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோயில் ரிஷிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

நான்காவதாக **மானுஷ பிரதிஷ்டை**. இந்த முறையில் நான்கு வேதங்களையும் கற்று உணர்ந்த அந்தணர்களால் வேத மந்திரங்களைக் கொண்டு விகனஸ மஹரிஷி அருளிய ஸ்ரீ வைகானஸ பகவத் சாஸ்த்திரப்படி, பிரதிஷ்டை செய்தவை. வைகானஸ பகவத் சாஸ்த்திரம் ஸ்ரீ மந் நாராயணனால் விகனஸ முனிவருக்கு உபதேசிக்கப்பட்டது. ஸ்ரீ விகனஸர் $1^1/2$ கோடி ஸ்லோகங்களால் பூஜை முறைகளை தன்னுடைய சிஷ்யர்களான ஒன்பது ரிஷிகளுக்கு உபதேசித்தார். இவ்வளவு பெரிய சாஸ்த்திரத்தை அல்ப சக்தி உள்ள மனிதர்களால் படித்து உணர்ந்து அதன்படி செயல்பட இயலாது என்று கருதிய ஸ்ரீ விகனஸரின் சிஷ்யர்களான ப்ருகு மஹரிஷி, அத்ரி மஹரிஷி, மரிசி மஹரிஷி, காச்யப மஹரிஷி ஆகியவர்கள் $1^1/2$ கோடியை சுருக்கி 4 லட்சமாக அருளியுள்ளார்கள். வைகானஸ சாஸ்த்திரப்படி பூஜை நடக்கும் கோயில்களில் ஒவ்வொரு செயலுக்கும் மந்திரம் சொல்லப்பட வேண்டும். உதாரணமாக அர்ச்சகர் கோயில் சாவிகளை எடுத்துக்

கொண்டு கோயிலுக்கு வரும்போதும் கோயிலை சுற்றும் போதும், சாவியை பூட்டில் பொருத்தும் பொழுதும், கதவை திறந்து வலதுகாலை முன்வைத்து உள்ளே நுழையும் பொழுதும் நந்தா விளக்கின் திரியை தூண்டும்பொழுதும், தரையை பெருக்கும் பொழுதும் கூட அது அதற்கென ஏற்படுத்தப்பட்ட மந்திரங்களை சொல்லி செய்ய வேண்டும். எனவே வைகானஸ பூஜை மிகவும் சிறப்பானது. ஸ்ரீ கரிகிருஷ்ண பெருமாளின் கோயிலில், கோயில் ஏற்பட்ட நாளிலிருந்து இன்றளவும் ஸ்ரீ வைகானஸ பகவத் சாஸ்த்திரப்படி பூஜை நடைபெற்று வருகிறது.

இந்த பூஜை முறையில் இவ்வுலகில் வாழும் வரையில் மகிழ்ச்சியுடன் வாழவும், பின்னர் வைகுண்டத்தை அடையவும் வழி வகுக்கப்பட்டுள்ளது. இத்தகைய சிறப்பு வாய்ந்த ஸ்ரீ விகனஸரின் மூலவர், உத்ஸவர் விக்ரகங்கள் இந்த கோயிலில் ப்ரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

திருக்கோயில் :-

இத்திருக்கோயில் கரிகால சோழ மஹாராஜா வால் அமைக்கப்பட்டதாகும். ஏற்கனவே கற்றலி யாக இருந்த கருவறையை ஒட்டி அந்தராளம், முக மண்டபம், மஹா மண்டபம் இவைகளை அமைத்து கருவறைக்கு மேலே கூடாகார விமானம் அமைத்து கட்டப்பட்டுள்ளது. விமான கோஷ்டங்களில் தேவதைகள் உருவம் அமைக்கப்படாமல் காலியாகவே உள்ளன. இது போலவே சன்னதி சுற்று சுவர்களில் உள்ள கோஷ்டங்களும் காலியாகவே உள்ளன. பெருமாள் சன்னதிக்கு எதிரே கருடாழ்வார் சன்னதி உள்ளது. கருடன் பெருமாளுக்கு வாகனமாகவும், கொடியாகவும் இருப்பவர். இங்குள்ள கருடன் பெருமாளை நோக்கியபடி கூப்பிய கரங்களுடன் நின்றபடி சேவை சாதிக்கிறார். கருடனை வலம்

வந்து வழிபட்டு வந்தால் புத்திர பாக்கியம் ஏற்படும். விஷகடிகளினால் ஏற்பட்ட துன்பங்கள் விலகும். கருடன் பெருமாளுக்கு முக்கி யமான வாகனமாக உள்ளார். பெருமாள் கோயில் விழாக்களில் கருட வாகன சேவை மிகவும் முக்கிய மானதாகும். இந்த கோயிலில் சித்திரை திருவிழா வில் கருடவாகன உத்ஸவம் நடைபெறுகிறது. கருடன் சன்னதிக்கு பின்னால் கொடி மரம் ஸ்தாபனம் செய்யப்பட்டு ள்ளது. இந்த கொடி மரத்தில் தான் சித்திரை திருவிழாவில் நாற்பது முழம் சல்லாத் துணியில் கருடனின் உருவம் வரையப்பட்டு பூஜைகள் செய்து கொடியேற்றம் நடைபெறுகிறது. அன்று முதல் ஒன்பது நாட்களும் காலை மாலை இருவேளைகளும் கொடி மரத்தில் கருடனை ஆராதித்து வருவார்கள். ஒன்பதாம் நாள் மாலை த்வஜ அவரோஹணம் செய்யப்படும். கொடி மரத்திற்கு பின்னால் பஞ்ச பலி என்று சொல்லப்படுகிற ஐந்து பலிபீடங்கள் அமைந்துள்ளன. அவற்றிற்கு பின்னால் பூத பலி பீடம் உயரமாக அமைக்கப்பட்டுள்ளது. பூத பலிக்கு பின்னால் தீபஸ்தம்பம் இருந்தது. விசேஷ நாட்களில் தீபஸ்தம் பத்தின்மேல் விளக்கு ஏற்றுவார்கள். த்வஜ ஸ்தம்பத் துக்கு நேராக நாலு கால் மண்டபம் உள்ளது. இந்த மண்டபத்திற்கு த்வஜாரோஹண மண்டபம் என்று பெயர். இந்த மண்டபத்தில் பெருமாள் எழுந்தருளிய பின் கொடியேற்றம் நடைபெறும். கொடியிறக்கம் செய்யும்போதும் பெருமாள் இந்த மண்டபத்தில் எழுந்தருளுவார். வசந்தோட்ஸவ காலத்தில் பெருமாள் இந்த மண்டபத்தில் எழுந்தரு ளுவார். பிரதி வெள்ளிக் கிழமைகளில் சௌந்தர்ய வல்லி தாயாருக்கு கோயிலுக்கு உள்ளேயே உத்ஸவம் நடைபெறும். பிரதி வெள்ளிதோறும் சௌந்தர்யவல்லி தாயார் இந்த மண்டபத்தில் எழுந்தருளி ஊஞ்சல் சேவை நடைபெறும். இந்த த்வாஜாரோஹண மண்டபத்

திற்கு தெற்கு பக்கம் மகிழ மரம் இருக்கிறது. இந்த கோயிலில் ஸ்தல விருக்ஷம் மகிழ மரமாகும். மகிழம்பூ காய்ந்து போனாலும் வாசனை தரும். சான்றோர்கள் வறுமையில் வாடினாலும் பிறர்க்கு மகிழ்ச்சி தரும் செயல்களையே செய்வார்கள். பாரத்வாஜ முனிவர் மகிழ மரத்தடியில் அமர்ந்து தவம் செய்தார் என்றும் பாரத்வாஜருக்கு தரிசனம் தரவே ஸ்ரீ கிருஷ்ணர் மாடு மேய்க்கும் யாதவர் உருவில் சேவை சாதித்தார் என்றும் கூறப்படுகிறது. இந்த மகிழ மரத்தடியில் மகிழம்பூவின் இனிய மணத்தை முகர்ந்தபடி அமர்ந்து இருந்தால் மனதில் மகிழ்ச்சி ஏற்படும். நல்ல ஆரோக்கியமும் ஏற்படும்.

சுகந்திம் புஷ்டிவர்த்தனம் என்ற வேத வாக்கியப்படி நல்ல நறுமணமானது புஷ்டியை அதிகரிக்க செய்யும்.

பெருமாள் சன்னதியில் கருவரையில் ஸ்ரீ கிருஷ்ணர் சிலாமூர்த்தியாக எழுந்தருளியிருக்கிறார். இவரைப் பற்றிய தியான ஸ்லோகம் வருமாறு

அம்ருத கலச தாரம் கோபவேஷம் ததானம்
சிரசிவித்ருத யஷ்டிம் பாணிணா தக்ஷிணேனா
கடி விநிஹித அஸ்தம் காந்தப்ருந்தாவசேம்
அணிசம் அனபவேயம் சுந்தரம் ஸ்ரீ பதேசம்

ப்ருந்தாரண்ய நிவாஸாய வைகானஸ பாரத்வாஜ பூஜிதாய சௌந்தர்யவல்லி சமேதாய ஸ்ரீகரிகிருஷ்ணாய நமோ நம:

ஸ்ரீ கரிகிருஷ்ண பெருமாள் துதி

1. அரணிய நதியின் தென் கரையில்
அழகே உருவாய்க் கண்ணனவன்
ஆயர்பாடி நடுவினிலே
புற்றில் வந்து தோன்றினனே
ஆநிரை மேய்க்கும் கோலத்தில்
அமிர்தகலசம் தலையில் தாங்கி

மாடு மேய்க்கக்கோலொன்று
வலது கரத்தில் வாகாய்பிடித்து
இடுப்பில் இனிதாய் இடக்கரம் வைத்து
புன்னகை பூத்த முகத்துடனே
வடக்கு பார்த்து நின்றபடி
புனிதன் காட்சித் தருகின்றான்
எல்லாதர்மமும் விட்டே நீர்
என்னடி இணைகள் அடைவீரேல்
எல்லாப் பாவமும் யான்போக்கி
வீடும் தருவேன் என்கின்றான்
காக்கும் கண்ணன் கழல் பணிந்து
களைவோம் துன்பம் எல்லாமே.

2. காக்கும் கடவுள் கரிகிருஷ்ணன்
கலியுக தெய்வம் கரிகிருஷ்ணன்
கார்முகில் வண்ணன் கரிகிருஷ்ணன்
கமலைக் கணவன் கரிகிருஷ்ணன்

3. ஆயர்பாடித் தலைவன் அவன்
அன்பாய்த் தொழுவோர்க்கு அருள்பவனாம்
நம்பியே நாடிவருபவர்க்கு
நம்பியும் நல்குவான் அருள்மாரி

4. ஏய்த்துப் பார்க்க நினைப்பவரை
மாய்த்து முடிப்பான் கரிகிருஷ்ணன்
மோசம் செய்ய நினைப்போரை
நாசம் செய்வான் கரிகிருஷ்ணன்

அறத்தின் வழியே செல்வோரை
அணைத்துக் கொள்வான் கரிகிருஷ்ணன்
அடியினை பணிந்து வாழ்வோரை
என்றும் காப்பான் கரிகிருஷ்ணன்

இயற்றியவர் :
ஸ்ரீ கோபாலகிருஷ்ணன் பட்டாச்சாரியார்
44, சமரபுரி தெரு, பொன்னேரி.

என்கிற தமிழ் பாடல் பெருமாளின் தோற்றம் மற்றும் சிறப்புகளை விவரிக்கிறது. இந்த பாடலை ஸ்ரீ உ.வே. கோபாலகிருஷ்ண பட்டாச்சாரியார் ஆக்கியுள்ளார். பெருமாள் சன்னதியில் வைகானஸ சாஸ்த்திரத்தின் விதித்தப்படி பஞ்சமூர்த்தி விதானமாய் பிரதிஷ்டை ஆகி உள்ளது.

பஞ்சமூர்த்திகளாவது,

1. விஷ்ணு - மூலவர்
2. புருஷர் - கௌதுகர்
3. ஸத்தியர் - உத்ஸவர்
4. அச்யுதர் - ஸ்நபன மூர்த்தி
5. அநிருத்தர் - பலிமூர்த்தி (செல்வர்)

மூலவரிடம் ஸர்வசக்திகளும் அடங்கியுள்ளது. கௌதுகரிடம் மூலவரிடமிருந்து வெளிப்படும் சக்தி கௌதுகர் மூலமாக எல்லா ஆராதனைகளும் ஏற்கிறார். உத்ஸவ மூர்த்தியாக சன்னதிக்கு வெளியில் எழுந்தருளி கிராம ப்ரதக்ஷிணம் கண்டருளி கிராமத்தில் உள்ள அனைவரையும் தானே கண்டு அருள் பாலிக்கிறார். ஸ்நபன மூர்த்தி நித்ய திருமஞ்சனம் கண்டருளியிருக்கிறார். செல்வர் என்னும் பலிமூர்த்தி ஆலயத்தில் உள்ள த்வார தேவதைகள் மற்றும் பரிவார தேவதைகளுக்கு பலி சாதிக்கிறார். பூத பலிபீடத்தில் சாதிக்கப்படும் பலி அன்னத்தை பயத்தால் பீடிக்கப்பட்டவர்கள் துஷ்ட தேவதைகளால் பீடிக்கப்பட்டவர்கள் பயங்கர கனவுகளை கண்டு தூக்கம் இல்லாமல் இருப்பவர்கள் இவர்கள் உட்கொண்டால் பயம் தெளிந்து சுகம் அடைகிறார்கள். பெருமாள் சன்னதியில் அந்தராளத்துக்கு வெளியில் பூஜை முறையை உபதேசித்தவரும் முனிவர்களுக்குள் முதல்வரு மான ஸ்ரீவிகனஸ குரு எழுந்தருளியிருக்கிறார். இவரை வணங்கி ஞானத்தை பெறலாம். ப்ரதி வருஷம் ஆனி மாதம் திருவோண நட்சத்திரத்தில் வாருஷிக உத்ஸவம் நடைபெறுகிறது.

இக்கோயிலில் உள்ள அதிசயங்கள் :

1. பெருமாள் சுயம்புவாக தோன்றியபடி ஆதாரபீடம் இல்லாமல் வெறும் தரையில் நின்ற திருக்கோலமாய் காட்சி அளிக்கிறார். அஷ்டபந்தனம் சாத்துவது இல்லை பெருமாள் நிற்கும் இடத்தில் புற்று மண்தரை கெட்டியாக அமைந்துள்ளது. எவ்வளவோ அபிஷேகங்கள் நடைபெற்று வந்தாலும் இந்த மண் கரைந்து வெளியேறுவதோ இல்லை.

2. பெருமாள் தன் சங்கல்பத்தின்படி சாய்வாக நின்றபடி சேவை சாதிக்கிறார்.

3. இக்கோயிலில் தாயார் சன்னதி பெருமாளுக்கு இடது பக்கமாக அமைந்தது மற்றோர் அதிசயம்.

4. விஷ்ணு கோயில்களில் தனி கோயில் தாயார் மூலவர் அமர்ந்தபடி தான் காட்சி தருவார். இக்கோயிலில் தனிக் கோயில் தாயார் நின்றபடி காட்சியளிக்கிறார். இது நான்காவது அதிசயம். இது குறித்து ஓர் கதை சொல்லப்படுகிறது.

பரத்வாஜ ரிஷி கோயிலின் ஸ்தல விருட்சமாகிய மகிழ மரத்தின் அடியில் அமர்ந்து பெருமாளை தியானம் செய்து வந்தாராம். அவர்கண் திறக்கும் பொழுதெல்லாம் பெருமாளை தரிசித்து மகிழ்வாராம்.

ஒரு முறை பிராட்டி பெருமாளுக்கு வலது புறம் நின்று உபசாரங்களை செய்தாராம். அப்பொழுது பரத்வாஜர் கண் விழித்து பார்க்கையில் பெருமாள் அவருக்கு சேவையாகவில்லையாம். பெருமாள் தரிசனத்தை அடைய முடியாமல் பிராட்டி மறைத்து கொண்டு நின்றதால் சீற்றம் அடைந்த பரத்வாஜர் விலகிப்போ என்று உரத்த குரலில் சொன்னாராம். அதை கேட்ட பிராட்டி உடனே மறைந்து போனாராம். பிராட்டியின் அருள் இல்லாததால் பரத்வாஜருக்கு தன் தியானத்தை தொடர முடியவில்லை.

எவ்வளவு முயன்றும் மனத்தை ஒருமுகப்படுத்த முடியாத தால் சஞ்சலம் அடைந் தார். தனக்கு ஏன் தியானம் கைகூட வில்லை என்பதை ஆராய்ந்து பார்த்து பிராட்டியை விலகிப்போ என்று சொன் னது தான் காரணம் என்பதை உணர்ந்தார். பெருமாளை தரிசிக்க இயலாததால் சினம் அடைந்து பிராட்டியிடம் அபசாரபட்டதை உணர்ந்து பிராட்டியை பிரார்த்தித்தார்.

"சந்தான பத்ம ஸரஸிருஹ பாரிஜாத
ப்ருந்தாவனே பவனஸஞ்சரன ப்ரவிணம்
ப்ருந்தாரகேச முனி ப்ருந்த உபசோபிரீட்யம்
சௌந்தர்யவல்லி ரமணி ரமணம் பஜேஹம்"

என்று பிராட்டியுடன் சேர்த்து பெருமாளை ப்ரார்த்தித் தாராம்.

பிராட்டி அவர் முன் தோன்றி இனிமேல் உன் பெருமாள் தரிசனத்துக்கு தடையில்லாமல் உன் எதிரிலே சேவை சாதிக்கிறேன் என்று அருளினாராம்.

இது தான் பிராட்டி பெருமாளுக்கு இடது புறம் நிலைகொண்டதற்க்கான காரணம் என்று மேல் கண்ட கதை கூறுகிறது.

இந்த தாயார் மூலவர் இரண்டு கரங்களுடன் ருக்மணி பிராட்டியை போன்று காட்சி அளிக்கிறாள்.

5. இக்கோயிலின் ராஜகோபுரத்துக்கு முன்பாக பதினாறு தூண்களை கொண்ட கருங்கல்லால் ஆன மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மண்டபத்தில் உள்ள பதினாறு தூண்களும் செங்குத்தாக இல்லாமல் சிறிது சாய்ந்த நிலையிலேயே அமைக்கப்பட்டுள்ளன. பல நூற்றாண்டு களாக புயல் காற்று பெருமழை இவைகளை தாக்கு பிடித்துக்கொண்டு மண்டபம் நிலை நிற்கிறது. இது ஓர் அதிசயமாகும்.

6. பெருமாள் சன்னதி வடக்கு நோக்கியபடி உள்ளது. சாதாரணமாக கிழக்கு அல்லது மேற்கு நோக்கிய வாசல் இருந்ததால் தான் கருவரையில் வெளிச்சம்

இருக்கும். வடக்கு வாசல் இருந்தாலும் கருவறையில் உள்ள பெருமாளை சேவிக்கக் கூடிய வகையில் வெளிச்சம் வரும்படி கோயில் அமைக்கப்பட்டு ள்ளது. காலை, பகல், மாலை ஆகிய வேளைகளில் கருடன் சன்னதி வாசலில் இருந்து பெருமாளை தரிசிக்க போதுமான வெளிச்சம் வருகிறது. இதுவும் ஓர் அதிசயம்.

அமைப்பு :

இந்த திருக்கோயிலில் தனியாக ஆண்டாள் சன்னதி கிழக்கு முகமாய் அமைந்துள்ளது. ஆண்டாள் சன்னதிக்கு கோபுரம் அமைக்கப்படவில்லை. பெருமாள் சன்னதிக்கு வலதுபுறம் ஆழ்வார்கள் சன்னதி அமைந்துள்ளது. ஆழ்வார் சன்னதியிலே முதலில் விஷ்வக்சேனரும் பிரதிஷ்டை செய்யப்பட்டு உள்ளார்.

ஸ்ரீ வைஷ்ணவ ஆசாரியர்களான திருக்கச்ச நம்பிகள், ராமானுஜர், மணவாளமாமுனி, முதலிய ஆசார்யர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு உள்ளனர்.

நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், திருக்கச்சி நம்பிகள் ராமானுஜர் மற்றும் மணவாள மாமுனிகள் ஆகிய ஐவர்க்கும் உற்சவ மூர்த்திகள் உள்ளன. முன்காலத்தில் பிரதி மாதமும் பெருமாள், தாயார், ஆண்டாள், ராமர், ஆழ்வார், ஆசாரியர்கள் ஆகியோருக்கு திருநட்சத்திரம் உத்ஸவம் நடைபெற்று வந்தது.

கோயிலில் வருமானம் இல்லாததாலும், உபயதாரர்கள் இல்லாததாலும் இவைகள் நின்று போய் உள்ளன.

பெருமாளுக்கு மட்டும் ரோகிணி மண்டபப்படி உபய தாரர்களைக் கொண்டு நடத்தப்பட்டு வருகிறது.

இக்கோயிலில் நின்றுபோய் உள்ள பஞ்சபர்வ உத்ஸவமும், விரைவில் நடத்தப்பட வேண்டும். பஞ்ச பர்வம் என்றால் ஒவ்வொரு தமிழ் மாத பிறப்பும்,

அமாவாசை, பௌர்ணமி, இரண்டு ஏகாதசி ஆகிய ஐந்து நாட்களை குறிக்கும் இக்கோயிலில் சக்ரவர்த்தி திருமகனார் சீதாதேவி இளையபெருமாள் ஆகியோருக்கு கோபுரத்துடன் கூடிய தனி சன்னதி உள்ளது. சிறிய திருவடி (அனுமார்)க்கும் சன்னதி உள்ளது.

இராமருக்கு தனியாக த்வஜஸ்தம்பமும் ஆவரண பலிபீடங்களும் அமைந்துள்ளன. பங்குனி மாதத்தில் ஸ்ரீஇராமர் பத்துநாள் ப்ரம்மோட்ஸவம் நடைபெற்ற வந்தது. திருவாயர்பாடி சின்ன மாட வீதியை சுற்றி உத்ஸவம் நடைபெற்று வந்ததால் சின்ன உத்ஸவம் என்று அழைக்கப்பட்டது. இக்கோயிலின் ஈசான மூலையில் அலங்கார மண்டபம் அமைந்துள்ளது. த்வஜாரோஹண மண்டபத்தின் கிழக்கு பாகத்தில் யாகசாலை அமைந்திருந்தது. இப்பொழுது மீண்டும் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இக்கோயிலில் பவித்ரோட்ஸவம், வஸந்த உத்ஸவம் நவராத்திரி உத்ஸவம், கஜேந்திர மோட்சம், வைகுண்ட ஏகாதசி உத்ஸவம், ரத சப்தமி உத்ஸவம், கிருஷ்ண ஜயந்திக்கு மறுநாள் உரியடி உத்ஸவம், விஜயதசமி பார்வேட்டை உத்ஸவம், திருவாடி பூர உத்ஸவம், போகி பண்டிகை அன்று ஆண்டாள் திருக்கல்யாண உத்ஸவம், வனபோஜன உத்ஸவம், திருகார்த்திகை உத்ஸவம், பகல் பத்து, ரா பத்து உத்ஸவம், சங்கராந்தி உத்ஸவம், பங்குனி உத்திரத்தில் தாயார் திருக்கல்யாண உத்ஸவம், ஸ்ரீ ஜெயந்தி உத்ஸவம், உடையவர் சாத்துமுறை உத்ஸவம், நம்மாழ்வார் உத்ஸவம் ஆகியவைகளும் நடைபெற்றவந்தன.

இக்கோயிலில் விஸ்வரூப பூஜை காலைசந்தி பூஜை, உச்சிகால பூஜை, சாயங்கால பூஜை, இராத்திரி பூஜை, அர்த்தஜாம பூஜை இரண்டு வேளை நித்ய ஹோமம் இவைகளும் நடைபெற்று வந்தன.

இக்கோயிலில் எட்டு அர்ச்சர முறைக்காரர்கள் உள்ளனர். இக்கோயிலில் பெருமாள் அவதரித்த காலம் முதல் வைகானஸ சாஸத்திரப்படி பரத்வாஜ கோத்திரத்தை

சேர்ந்த விஷ்ணு பட்டர் என்பவர் அர்ச்சக கைங்கர்யம் செய்து வந்தார். விஷ்ணு பட்டரின் சந்ததியரான் எட்டு முறைகாரர்களும் ஓர் முறைக்கு தலா 4 நாட்கள் கைங்கர்யம் பார்த்து வந்தனர். இவர்களில் சந்ததி இல்லாதவர்களின் முறையை அவருடைய நெருங்கிய உறவினர்கள் பார்த்து வருகின்றனர்.

பிரம்மோத்ஸவம் சந்திப்பு :

இத்திருக்கோயிலில் சித்திரை மாதத்தில் ப்ரம்மோத்ஸவம் நடைபெறுகிறது. சித்திரை மாதத்தில் எந்த நாளில் பிற்பகலில் திருவோண நட்சத்திரம் ஏற்படுகிறதோ அந்த நாளை 9வது திருநாளாக கொண்டு முன்னதாக கொடியேற்றம் நடைபெறும் கொடியேற்றம் நடைபெற்ற ஐந்தாம் நாள் இரவு கருடசேவை நடைபெறும். அன்றைய தினம் ஸ்வாமி கருடவாஹனத்தில் புறப்பட்டு இவ்வூர் அரிஅரன் பஜார் தெருவில் கும்பமுனிமங்கலம் அகத்தீஸ்வரர் சுவாமி பஞ்ச மூர்த்தி புறப்பாடாகி கணகர் சத்திரம் பூபந்தலில் எழுந்தருளியிருக்கும் ரிஷப வாஹன ஆருடராய் உள்ள அகத்தீஸ்வரனை எதிர்கொள்வார். அப்பொழுது விசேஷ வாணவேடிக்கைகள் நடைபெறும். பின்னர் பெருமாள் சார்பில் இரண்டு மாற்று மாலைகள் (பெருமாளுக்கு சாத்தாதது) வெற்றிலை, பாக்கு, தேங்காய், பழம், சூடம், தஷிணை இவைகளை ஓர் தட்டில் வைத்து பரிசாரகர் ஏந்தி வர அர்ச்சகர்களை முன்னிட்டு கொண்டு பெருமாள் கோயில் நிர்வாகத்தினர் மற்றும் ஊர் பிரமுகர்கள் புடை சூழ பாண்டு முதலிய விசேஷ வாத்தியங்களுடன் மெதுவாக எடுத்துச் சென்று ஸ்ரீ அகத்தீஸ்வரர்க்கு அர்ப்பணம் செய்வார்கள். அதனை சிவாச்சாரியார் வாங்கி கொண்டு ஈஸ்வரனுக்கு சாத்தி பஞ்சமூர்த்திகளுக்கும் தீபாராதனை செய்வார்கள். பிறகு ஸ்தானீக பட்டாச்சாரியார் முதலாக பரிசாரகர் மற்றும் பெருமாள் கோயில் தர்மகர்த்தா, நிர்வாக அதிகாரி மற்றும் கிராமத்தார்களுக்கு கிரமமாக பிரசாதம் கொடுத்து மறியாத மாலைகளை சிவாச்சாரியார் அணிவிப்பார்.

தீபாராதனை தட்டை பெற்றுக்கொண்டு பட்டாச்சாரியார் முதலியவர்கள் பெருமாளிடத்தில் வந்து சேர்வார்கள் அதனை தொடர்ந்து அகத்தீஸ்வரனின் சார்பில் மாற்று மாலைகள் இரண்டு, வெற்றிலை பாக்கு, தேங்காய், பழம், சூடம், தஷிணை இவைகளுடன் சிவாச்சாரியாரை முன்னி ட்டு கொண்டு சிவன் கோயில் தர்மகர்த்தா கிராமத்தார்கள் வாத்தியங்களுடன் கொண்டு வந்து பட்டாச்சாரியாரிடம் சேர்ப்பார்கள் பட்டாச்சாரியார் அதைப் பெற்று பெருமாளுக்கு தீபாராதனை செய்து சிவாச்சாரியார் முதலாக அவர்களுடன் வந்தவருக்கும் பிரசாதம் மற்றும் மரியாதை மாலைகளை அணிவித்து ஸ்ரீ சடாரி சாதிப்பார்கள். தீபாராதனை தட்டை பெற்றுக்கொண்டு அவர்கள் திரும்பி விடுவார்கள். பிறகு பெருமாளும் அகத்தீஸ்வரனும் முன்னுக்கு எழுந்தருளுவார்க்ள். இதற்குள் விடியற்காலை நேரமாகிவிடும். வெகு அருகில் வந்தவுடன் ஒரே சமயத்தில் பெருமாளுக்கும் ஈஸ்வரனு க்கும் கற்பூர தீபாரானை நடைபெறும். இதை தான் சந்திப்பு உத்ஸவம் என்று கூறுவார்கள்.

திருக்குளம் :-

இக்கோயில் திருக்குளம் கோயிலுக்கு தெற்கில் அமைந்துள்ளது. இத்திருக்குளத்தில் நீராடி பெருமாளை பிரதஷிணம் செய்து ஸ்நபன திருமஞ்சனம் செய்பவர் களுக்கு குழந்தை பாக்கியம் ஏற்பட்டு வருகிறது. தற்பொ ழுது படிகள் இல்லாமல் உள்ளது. இதை சீர்படுத்தி அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத் திருகுளத்திற்கு சந்தான புஷ்கரணி என்று பெயர். ஒரு காலத்தில் பெருமாளுக்கு திருமஞ்சன தீர்த்தம் இந்த குளத்தி லிருந்து தினமும் கொண்டு வரப்பட்டது.

திருஆயர்பாடி மக்களும் இக்குளத்து நீரையே குடிநீராக பயன்படுத்தி வந்தனர்.

திருத்தேர் :-

தேரில் பெருமாளை தரிசிப்பவர்களுக்கு மோக்ஷம் என்று சொல்லப்படுகிற விடுபேறு கண்டிப்பாக உண்டு. இது மட்டும் இன்றி பல நற்பலன்களும் கூறப்படுகிறது. இப்படி சிறப்பு வாய்ந்த இத்தேர் பழுது அடைந்துவிட்டது. புதிய தேர் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெருமாளை முறைப்படி வணங்கி வேண்டினால் நம்முடைய விருப்பங்களை நிச்சயமாக நிறைவேற்றுவார்.

மங்கள ஸ்லோகங்கள் :

"வைகானஸகுரோ ப்ரோக்த விதிநார்ச்சிதாய மஹாத்மனே
ப்ருந்தாரண்ய நீவாஸாய ஸ்ரீ கரிகிருஷ்ணாய மங்களம் !"

"அரண்ய நதிதிரே ப்ருந்தாரண்ய மஹீதலே
ஸ்ரீ மதே கரிகிருஷ்ணாய மங்களம் நித்ய மஸ்துதே !"

"சந்தான புஷ்கரணி தீர்த்தோத்கர தடவாஸினே
சுந்தரவல்லி சமேதாய கோபவேஷாய மங்களம் !"

"லக்ஷ்மி வல்லபசங்கல்ப வல்லபாய மஹாத்மேன
ஸ்ரீ மதே விகநஸே பூயாத் நித்ய ஸ்ரீ நித்ய மங்களம் !"

அச்சிட்டோர் : TLS பிரிண்டர்ஸ்,
பொன்னேரி. ✆ : 274228